IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.65/2024

Deposition of Witness for PW1.

Name : திருமதி. ஜேசு ஜெமிமா மேரி
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.11.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 1ம் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 1953ம் வருடத்திய எனது தாயார் பெயரில் உள்ள தொம்மாய் நாடாச்சி என்கிற தொம்மாச்சி நாடாச்சி பெயரில் உள்ள மலையாள பாக பத்திர ஆவணம், தமிழ் மொழி பெயர்ப்புடன் கூடியது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 07.12.1957 தேதியிட்ட வறுவேல் நாடார் பெயரில் உள்ள ஒற்றிய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 22.04.1965 தேதியிட்ட மரிய தங்கம் நாடாச்சி பெயரில் உள்ள Made Over பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. 09.08.1979 தேதியிட்ட ரூ.500/-க்கான பதிவு செய்யப்பட்ட ரசீது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 09.08.1979 தேதியிட்ட மரிய மெய்யல் நாடாச்சி பெயரில் உள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 09.08.1979 தேதியிட்ட பன்னீர் செல்வம் பெயரில் உள்ள ரூ.3000/-க்கான கடன் முறி பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. 26.05.2005 தேதியிட்ட 5ம் பிரதிவாதி ஆரோக்கிய கிறிஸ்டோபர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7. 05.06.2013 தேதியிட்ட நான் மற்றும் எனது சகோதர சகோதரிகளுக்கு இடையேயான பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் அசல் வா.சா.ஆ.8. வழக்கு பட்டிகை சொத்துக்கான எனது தாயார்

பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.9.

மேலும் ஆவணம் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.